**புலம்பெயர்வோர் மற்றும் அடைக்கலம்நாடுவோர்க்கான 110–ஆவது உலக நாள்**
**திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் செய்தி**

**ஞாயிறு, 29 செப்டம்பர் 2024**

**கடவுள் தம் மக்களோடு பயணிக்கிறார்!**

அன்புநிறை சகோதர சகோதரிகளே,

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 29–ஆம் நாள், ஆயர்கள் மாமன்றத்தின் 16–ஆவது சாதாரண பொதுப்பேரவையின் முதல் அமர்வு நிறைவுபெற்றது. கூட்டியக்கமே திருஅவையின் அடிப்படையான அழைப்பு என்னும் நம் புரிதலை இந்த அமர்வு ஆழப்படுத்தியது. ‘‘கூட்டியக்கம் என்பது இறைமக்கள் முன்னெடுக்கும் கூட்டுப் பயணம், அவர்களின் தனிவரங்களுக்கும் திருஅவையின் பணிநிலைகளுக்கும் இடையே நடக்கும் உரையாடல். இந்த உரையாடல் இறையாட்சியின் வருகைக்குத் துணைநிற்கிறது’’ (*தொகுப்பு அறிக்கை*, முன்னுரை).

கூட்டியக்கப் பரிமாணத்தை நாம் முன்நிறுத்தும்போது திருஅவையின் பயணம் செய்யும் இயல்பை நாம் கண்டுகொள்கிறோம். இறைமக்கள் யாவரும் வரலாற்றின் வழியாக விண்ணரசை நோக்கித் திருப்பயணம் செய்கிறார்கள் – ‘புலம் பெயர்கிறார்கள்’ என்று நாம் சொல்லலாம்!’’ (காண். *மக்களித்தாரின் ஒளி*, 49). விவிலியத்தில் நாம் வாசிக்கும் இஸ்ரயேல் மக்களின் வாக்களிக்கப்பட்ட நாடு நோக்கிய விடுதலைப் பயணம் இப்போது நம் கண்முன் வருகிறது.

அவ்வாறே, ஒவ்வொரு காலத்திலும் போல, இன்றைய நாள்களில் புலம்பெயர்கிறவர்களில், நிலையான வீடு நோக்கிப் பயணம் செய்யும் கடவுளின் மக்களின் சாயலைக் காண முடிகிறது. அவர்களுடைய எதிர்நோக்குநிறைப் பயணங்கள், ‘‘நமக்கோ விண்ணகமே தாய்நாடு. அங்கிருந்துதான் மீட்பராம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வருவாரெனக் காத்திருக்கிறோம்’’ (*பிலி* 3:20) என்பதை நினைவூட்டுகின்றன.

விவிலியத்தில் நாம் வாசிக்கும் விடுதலைப் பயணத்துக்கும் இன்று நாம் காணும் புலம்பெயர்ந்தோரின் பயணங்களுக்கும் இடையே நிறைய ஒற்றுமைகள் உள்ளன. மோசேயின் காலத்து இஸ்ரயேல் மக்கள்போலவே, ஒடுக்குமுறை, அத்துமீறல், பாதுகாப்பின்மை, பாகுபாடு, மேம்பாட்டுக்கான வாய்ப்புகள் மறுப்பு ஆகியவற்றிலிருந்து தப்பி ஓடிப் புலம்பெயர்கிறார்கள் மக்கள். பாலைவனத்தில் யூதர்கள் எதிர்கொண்டதுபோலவே, புலம்பெயர்கிறவர்கள் தங்கள் வழிகளில் பல தடைகளை எதிர்கொள்கிறார்கள்: தாகத்தாலும் பசியாலும் துன்புறுகிறார்கள், வலியினாலும் நோயினாலும் சோர்வுறுகிறார்கள், விரக்தியால் சோதிக்கப்படுகிறார்கள்.

எனினும், விடுதலைப் பயணத்தின் அடிப்படையான எதார்த்தம் – இதுவே அனைத்துப் பயணங்களின் எதார்த்தம் – என்னவெனில், கடவுள் தம் மக்கள் – அவர்கள் எக்காலத்திலும் எல்லா இடங்களிலும் அவருடைய பிள்ளைகள் – முன் சென்று அவர்களோடு உடன் நடக்கிறார். மக்களோடு கடவுள் உடனிருக்கிறார் என்பதே மீட்பு வரலாற்றின் உண்மை: ‘‘உன் கடவுளாகிய ஆண்டவரே உனக்குமுன் செல்பவர்! அவர் உன்னைவிட்டு விலக மாட்டார். உன்னைக் கைவிடவும் மாட்டார்!’’ (*இச* 31:6). எகிப்திலிருந்து வெளியேறிய மக்களுக்கு கடவுளின் உடனிருப்பு பல்வேறு வடிவங்களில் வெளிப்பட்டது: மேகத்தூண் மற்றும் இருளில் வழிகாட்டிய நெருப்புத் தூண் (காண். *விப* 13:21), கடவுளின் நெருக்கத்தை காணக்கூடிய வடிவில் உணர்த்திய, உடன்படிக்கைப் பேழையைப் பாதுகாத்த சந்திப்புக் கூடாரம் (காண். *விப*

33:7), இறைப்பாதுகாப்பை உறுதிசெய்த வெண்கலப் பாம்பை ஏந்திய கம்பம் (காண். *எண்* 21:8–9), பசியாலும் தாகத்தாலும் வாடிய மக்களுக்குக் கடவுள் கொடையாக வழங்கிய மன்னாவும் தண்ணீரும் (காண். *விப* 16–17) என பல்வேறு வடிவங்களில் வெளிப்பட்டது. ஆண்டவர் மிகவும் விரும்புகிற உடனிருப்பின் ஊடகம் கூடாரம். தாவீதின் அரசாட்சியில் கடவுள் கோவிலில் அல்ல, மாறாக, கூடாரத்தில் வாழவே விரும்பினார். இவ்வாறாக, ''ஒரு கூடாரத்தை விட்டு மறு கூடாரத்துக்கு மாறி'' (1 *குறி* 17:5) கடவுள் தம் மக்களோடு பயணித்தார்.

புலம்பெயர்கிறவர்களில் பலர் கடவுளைத் தங்களுடைய உடன் பயணியாகவும், வழிகாட்டியாகவும், மீட்புதரும் நங்கூரமாகவும் காண்கிறார்கள். புறப்படும் முன் தங்களையே அவரிடம் ஒப்படைக்கிறார்கள். புறப்பட்டபின் தங்களுடைய தேவையில் அவரைத் தேடுகிறார்கள். ஊக்கம்குறைந்த நேரங்களில் தங்களின் ஆறுதலை அவரில் கண்டடைகிறார்கள். நல்ல சமாரியர்கள் பலரை அவர் வழியாகக் காண்கிறார்கள். இறைவேண்டலில், தங்கள் எதிர்நோக்கை அவரிடம் ஒப்புவிக்கிறார்கள். பாலைவனங்களையும், ஆறுகளையும், கண்டங்களின் எல்லைகளையும் தாண்டிச் செல்கிற புலம்பெயர்கிறவர்களோடு எத்துணை விவிலியங்களும், நற்செய்தி நூல்களின் பிரதிகளும், இறைவேண்டல் நூல்களும், செபமாலைகளும் உடன் செல்கின்றன!

கடவுள் தம் *மக்களோடு* மட்டுமல்ல, *மக்களிலும்* பயணிக்கிறார். அதாவது, வரலாற்றில் பயணிக்கும் அனைத்து மக்களோடும், குறிப்பாக சிறியவர்கள், வறியவர்கள், விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டவர்களோடு தம்மையே அடையாளப்படுத்துகிறார். மனுவுருவாதல் என்னும் மறைபொருளின் நீட்சியை நாம் இதில் காண்கிறோம்.

இதன் காரணமாக, தேவையில் இருக்கும் ஒவ்வொருவரையும் சந்திப்பதுபோலவே, புலம்பெயர்கிறவர்களை நாம் சந்திக்கும்போதும், ''கிறிஸ்துவையே சந்திக்கிறோம். அவரே நம் கதவைத் தட்டுகிறார். அவரே பசியோடும் தாகத்தோடும், அந்நியராகவும் ஆடையின்றியும், நோயுற்றும் சிறைப்பட்டும் அங்கே நிற்கிறார். தம்மைச் சந்திக்கவும் தமக்கு உதவி செய்யவும் நம்மை அழைக்கிறார்'' (*மறையுரை, 'அச்சத்திலிருந்து விடுதலை' சந்திப்பு நிகழ்வில் பங்கேற்றவர்களோடு திருப்பலி*, சாக்ரோஃபானோ, 15 பிப்ரவரி 2019). *மத்தேயு* நற்செய்தி 25–ஆவது அலகில் நாம் காணும் இறுதித் தீர்ப்பு நிகழ்வு இதை உறுதி செய்கிறது: ''அந்நியனாக இருந்தேன். என்னை ஏற்றுக்கொண்டீர்கள்'' (வ. 35). மேலும், ''மிக் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்'' (வ. 40). பயணத்தின் ஒவ்வொரு சந்திப்பும் ஆண்டவரைச் சந்திப்பதற்கான வாய்ப்பாக அமைகிறது. ஒவ்வொரு சந்திப்பும் நலமும் மீட்பும் தருகிறது, ஏனெனில் நம் உதவியை நாடி நிற்கும் சகோதரன் அல்லது சகோதரியில் இயேசு இருக்கிறார். இவ்வாறாக, ஏழைகள் நம்மை மீட்கிறார்கள். ஏனெனில், ஆண்டவரின் முகத்தை அவர்களில் காணச் செய்கிறார்கள் (காண். *வறியவர்களுக்கான மூன்றாவது உலக நாள் செய்தி*, 17 நவம்பர் 2019).

பிரியமான சகோதர, சகோதரிகளே, புலம்பெயர்வோர் மற்றும் அடைக்கலம்நாடுவோருக்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்த நாளில், தங்கள் மண்ணைவிட்டுப் புறப்பட்டு மாண்புநிறை வாழ்க்கைச் சூழல்களைத் தேடிச் செல்கிற அனைவருக்காகவும் இறைவேண்டல் செய்வோம். அவர்களோடு நாம் பயணிப்போம். அவர்களோடு கூட்டியக்கம் போற்றுவோம். அவர்களையும், வரவிருக்கிற மாமன்றப் பேரவையின் இரண்டாம் அமர்வையும் ''புனித கன்னி மரியாவின் பரிந்துரைக்கு ஒப்புவிப்போம். அவரே தொடர்ந்து பயணிக்கும் நம்பிக்கைநிறை இறைமக்களின் குன்றா எதிர்நோக்காகவும் ஆறுதலாகவும் இருக்கிறார்'' (16–ஆவது பொதுப்பேரவை *தொகுப்பு அறிக்கை: தொடர்ந்து பயணித்தல்*).

**இறைவேண்டல்**

இறைவா, எல்லாம்வல்ல தந்தையே,
பயணம் செய்யும் உம் திருஅவை நாங்கள்!
விண்ணரசு நோக்கி நாங்கள் பயணிக்கிறோம்.
எங்கள் தாய்நாட்டில் நாங்கள் அந்நியர்போல வாழ்கிறோம்.
ஒவ்வொரு வேற்றிடமும் எங்கள் இல்லம் எனினும்
ஒவ்வொரு சொந்த இடமும் எங்களுக்கு வேற்றிடமே!
நாங்கள் இவ்வுலகில் வாழ்ந்தாலும்
விண்ணகமே எங்கள் தாய்நாடு!
தற்காலிக இல்லமாக நீர் எங்களுக்கு இவ்வுலகில் வழங்கியுள்ள பகுதியை
எம் சொந்தம் என எண்ணித் தேங்கிவிட அனுமதியாதேயும்!
நாங்கள் தொடர்ந்து பயணிக்க அருள்தாரும்!
புலம்பெயர்கிற எங்கள் சகோதர, சகோதரிகளோடு பயணிக்கும் நாங்கள்
நீர் எமக்காக ஏற்பாடு செய்துள்ள நிலையான இல்லத்தை நோக்கி
தொடர்ந்து வழிநடக்க உதவியருளும்!
எங்கள் கண்களையும் இதயங்களையும் திறந்தருளும்!
இவ்வாறாக, தேவையிலிருக்கும் ஒவ்வொருவரிலும்
உம் திருமகனும் எங்கள் ஆண்டவருமான இயேசுவை நாங்கள் சந்திப்போம்!
இன்றும் என்றும்!

ஆமென்.

*உரோமை, புனித யோவான் இலாத்தரன், 24 மே 2024. புனித கன்னி மரியா, கிறிஸ்தவர்களின் துணை, நினைவு*

திருத்தந்தை பிரான்சிஸ்

தமிழாக்கம்: தமிழக சமூகப்பணி மையம், திருச்சி

தலைவர்: மேதகு ஆயர் தாமஸ் அக்வினாஸ்
செயலர்: அருள்திரு இரா. ஜேசுதாஸ்